**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF, VANDAVASI.**

| | | |
|---|---|---|
| Case No | : | அ.வ.எண். 101/2018 |
| Deposition of Witness for | : | வா.த.சா. 1 |
| Name | : | பானு |
| Father's/Husband's Name | : | செல்வராஜ் |
| Village and Taluk | : | கொட்டை கிராமம், வந்தவாசி |
| Caste | : | -- |
| Nationality | : | இந்தியன் |
| Religion | : | இந்து |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of the day of 06.09.2019

**முதல் விசாரணை**

இந்த வழக்கில் நான் வாதியாவேன். நான் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். கடந்த 05.02.1976 அன்று ச.எண். 137/2ல் 1-3/4 செண்ட் நிலத்தை பாலகிருஷ்ணன் செட்டியார் 2ம் பிரதிவாதிக்கு முன்னுசாமி செட்டியார் மகன் அப்பு செட்டியார் என்பவர் எழுதிகொடுத்த கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ 1 ஆகும். பின்பு 04.01.2018 அன்று 1ம் பிரதிவாதிக்கு 2ம் பிரதிவாதி மேற்சொன்ன நிலத்தை கிரையம் செய்து கொடுத்தது சம்மந்தாமான கிரைய பத்தித்தின் சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ 2 ஆகும். கடந்த 18.03.2016 அன்று தாவா சொத்தை ராணி, ராஜகுமாரி, செல்வம், கவிதா, கண்ணன், ராமாயி ஆகியோர்களிடமிருந்து கிரையம் பெற்றது சம்மந்தமான கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ 3 ஆகும். தாவா சொத்து சம்மந்தமான சுப்புராய செட்டி மகன் பாலய்யா மற்றும் சிலர் பெயருக்கு வழங்கப்பட்ட சிட்டா நகல் வா.த.சா.ஆ 4 ஆகும். எனது பெயர் மற்றும் சிலர் பெயரில் வழங்கப்பட்ட சிட்டா நகல் வா.த.சா.ஆ 5 ஆகும். 09.04.2018 அன்று எனது வழக்கறிஞர் மூலமாக மாவட்ட பதிவாளர் மற்றும் சார்பதிவாளர் ஆகியோர்களுக்கு நான் அனுப்பிய அறிவிப்பு நகல் வா.த.சா.ஆ 6 ஆகும். அந்த அறிவிப்பை 3 மற்றும் 4 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.த.சா.ஆ 7 மற்றும் 8 ஆகும். கடந்த 24.04.2018 அன்று திருவண்ணாமலை மாவட்ட பதிவாளர் நிர்வாகம் செய்யார் என்பவருக்கு அனுப்பிய கடிதம் வா.த.சா.ஆ 9 ஆகும். கடந்த 25.05.2018 அன்று மாவட்ட பதிவாளர் செய்யார் அவர்களால் எனக்கு அனுப்பப்பட்ட பதில் கடிதம் வா.த.சா.ஆ 10 ஆகும்.

**மேற்கொண்டு ஆவணங்கள் குறியீடு செய்யவதற்காக முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**